தெங்கு ஆராய்ச்சி சபை - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தெங்கு ஆராய்ச்சி சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1971 இன் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி சட்டத்தின், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களுக்கான தாக்கங்கள் தவிர, சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையானது ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மை

குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் 39 தொடக்கம் 43 பிரிவுகள் வரையான	உத்தியோகத்தர் சேவை ஒப்பந்தத்தை மீறியதன் காரணத்தினால் அவரிடமிருந்து நிறுவனத்திற்கு அறவிடப்பட	பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

ஏற்பாடுகளின் பிரகாரம் பொருளாதார நலன்கள் அல்லது சேவை திறன் ஏற்படுவதற்கான அதிகளவு நிகழ்தகவு காணப்பட்டால் மட்டுமே வருமானமாக இனங்காணப்பட வேண்டிய போதிலும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டியவை என இனங்காணப்படாத, பெறுவனவு உறுதி செய்யப்படாத ரூபா 10,921,575 கடன்பட்டோர் வரவு வைக்கப்பட்டு திரட்டப்பட்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.	வேண்டிய செலுத்தப்பட்ட சம்பளம், கொடுப்பனவு, ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பு போன்ற நிறுவனத்திற்கு ஏற்பட்ட அனைத்து செலவுகளும் அதற்கு எதிராக பெற வேண்டிய வருமானம் கடந்த ஆண்டிற்கு சீர் செய்யப்பட்டு திரட்டப்பட்ட இலாபத்திற்கு சீர் செய்யப்பட்டுள்ளது.

1.5.2 கணக்கீட்டு குறைப்பாடுகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) 2024 ஆம் ஆண்டின் கட்டிடங்கள் பழுதுபார்த்தல் செலவிற்காக ஏற்கப்பட்ட ரூபா 18,391,145 ஆன தொகை கட்டிடங்கள் கிரயமாக மூலதனமாக்கப்பட்டிருந்தமையினால் கட்டிடங்கள் கணக்கு மிகையாக கணிக்கப்பட்டு ஆண்டின் மிகை அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது.	நிறுவனத்தினால் ஏற்கப்படுகின்ற செலவு நடப்பு ஆண்டின் செலவினமாக அல்லது மூலதன செலவீனமாக இனங்காணப்பட்டு அது எதிர்வரும் ஆண்டுகளில் தேய்வாக பதிவழிக்கப்படுவது நிறுவனத்தினால் ஏற்கப்பட்ட செலவின் தன்மை கருத்திற் கொள்ளப்பட்ட பின்னர் ஆகும். இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு அமைவாக இந்த செலவு மூலதனமாக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான வருடாந்த தேய்வு பெறுமதி கணக்கிடப்பட்டுள்ளது.	பழுதுபார்த்தல் செலவுகள் மூலதனமாக்கப்படல் வேண்டும்.
(ஆ) கடந்த ஆண்டுகளின் உத்தியோகப்பூர்வ இல்லங்களின் பழுதுபார்த்தல் செலவான ரூபா 552,322 ஆன தொகை மீளாய்வாண்டின் கட்டிட கிரயமாக கருதப்பட்டமையின் காரணத்தினால் கட்டிடங்கள் பெறுமதி ரூபா 552,322 இனால் மிகையாக கணிக்கப்பட்டிருந்ததுடன் திரட்டப்பட்ட நிதி அப் பெறுமதியினால் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது.	ஏற்பட்டுள்ள வழு ஏற்றுக் கொள்ளப்படுகின்றதுடன் இது 2025 ஆம் ஆண்டு கணக்கின் ஊடாக சரியாக சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கின்றேன்.	பழுதுபார்த்தல் செலவுகள் மூலதனமாக்கப்படல் வேண்டும்.
(இ) மின்சார தொடர்புகள் பெற்றுக் கொள்ளும் போது நிறுவனத்தினால் செலுத்தப்பட்டிருந்த மின்சார வைப்புத் தொகையான ரூபா 500,000 பெற வேண்டிய தொகையாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	5070000020 ஆம் இலக்க கணக்கிற்குரிய வைப்புத் தொகையான ரூபா 500,000 ஆன தொகை பெறவேண்டிய பெறுமதியாக 2025 ஆம் ஆண்டில் கணக்கிடப்படும் என தெரிவிக்கின்றேன்.	மின்சார வைப்பு பெற வேண்டிய தொகையாக கணக்கிடப்படல் வேண்டும்.

(ஈ) 2023 திசெம்பர் மாதத்திற்கான ரூபா 1,387,988 ஆன மின்சார செலவு மீளாய்வாண்டின் செலவாக கணக்கிடப்பட்டமையின் காரணத்தினால் மீளாய்வாண்டின் செலவு மற்றும் திரட்டபட்ட இலாபம் அதிகமாக கணக்கிடப்பட்டிருந்தது.	2023 திசெம்பர் மாதத்தின் மின்சார செலவு பொறுப்பாக கணக்கிடப்படுவதற்காக குறித்த செலவு விடயத்தினுள் நிதியேற்பாடு காணப்படாமையினால் அது நடப்பு ஆண்டிற்காக கணக்கிடப்பட்டுள்ளது. தற்போது திரண்ட இலாபத்திற்கு சீராக்கப்பட்டுள்ளமையினால் எதிர்காலத்தில் குறித்த ஆண்டின் செலவிற்கு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கடுமென தெரிவிக்கின்றேன்.	போதுமானதாக நிதியேற்பாடு பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.
(உ) கிணியம செயற்திட்டத்திற்காக ரூபா 3,019,750 தொகையான சூரிய மின்சக்தி அமைப்பை பெற்றுக் கொள்வதற்குரியதாக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 2,482,500 ஆன மூலதன பெறுமதி செலவொன்றாக கணக்கிடப்பட்டிருந்தது. இதன் காரணத்தினால் நடைமுறை அல்லாத சொத்துக்கள் பெறுமதி ரூபா 3,019,750 குறைவாகவும் மீளாய்வாண்டின் செலவு ரூபா 2,482,500 அதிகமாகவும் செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 537,250 குறைவாகவும் அறிக்கையிடப்பட்டிருந்தது.	நேர்ந்துள்ள வழு ஏற்றுக் கொள்ளப்பகின்றதுடன் இது 2025 ஆம் ஆண்டில் சரியாக சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கின்றேன்.	கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஊ) தாபன விதிக் கோவையின் IX அதிகாரத்தின் 2.2 பிரிவின் பிரகாரம் நியூசிலாந்தின் Castalia கம்பனியுடன் கைச்சாத்திடப்பட்ட Vanuatu Coconut Oil for Fuel Strategies இற்கான துணை ஒப்பந்தத்திற்கு மீளாய்வாண்டினுள் பெறப்பட்ட ரூபா 705,080 தொகை திரண்ட நிதிக்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், அத் தொகை தெங்கு ஆராய்ச்சி சபையின் வருமானமாக இனங்காணப்பட்டமையின் காரணத்தினால் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 705,080 இனால் அதிகமாக கணக்கிடப்பட்டிருந்தது.	குறித்த தொகை 2025 ஆம் ஆண்டில் தாபன விதிக் கோவையின் IX அதிகாரத்தின் 2.2 பிரகாரம் திரண்ட நிதிக்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கின்றேன்.	தாபன விதிக் கோவையின் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
1972 மார்ச் 30 திகதிய இலங்கை அரசின் வர்த்தமானி பத்திரிகையின் 1 ஆம் பகுதி 1 ஆம் பந்தியின் 1 ஆம் அட்டவணையின் 1 ஆம் பிரிவின் பிரகாரம்	i. பூச்சித் தொற்றைத் தடுப்பதற்கு மற்றும் குணப்படுப்பதற்கு ஆராய்ச்சி மேற்கொள்ளுதல் சபையின் கடமையான போதிலும் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் பரவி வரும் வெள்ளை ஈ பாதிப்பை தடுப்பதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது கடந்த 06 ஆண்டுகளாக இலங்கையின் தெங்கு பயிர்செய்கையில் வேகமாக பரவி இருந்தது.	வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்த ஆரம்பத்தில் பரிந்துரைக்கப்பட்ட 03 செயற்கை இரசாயன பூச்சிக்கொல்லிகளுக்கு மேலதிகமாக வேப்ப எண்ணெய், சவர்காரம் மற்றும் தண்ணீர் கலந்து தயாரிக்கக்கூடிய சூழலுக்கு உகந்த பூச்சிக்கொல்லி பின்னர் பரிந்துரைக்கப்பட்டது. அவ்வாறே மஞ்சல் நிற பொலித்தீன் தாள்கள் கிரீஸ் தடவி தெங்கு மரத்தின் தண்டின் மீது கட்டுவதன் ஊடாக பொறி வைக்கும் முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது.	பூச்சை தொற்றை தடுக்க வேண்டும்.
	ii. ஏற்றுமதி சந்தைக்கு இளநீர் வழங்கும் ஓரே நாடு இலங்கை ஆவதுடன் நாட்டினுள் காணப்படுகின்ற இளநீர் வகைகளில் சுவையிலும் தரத்திலும் உயர்ந்த வகைகளை அடையாளம் கண்டு பரலாக்குவது குறித்து தொடர்புபட்ட உத்தியோகத்தர்களுக்கு பரிந்துரைகளை வழங்குவதன் ஊடாக இளநீர் உற்பத்தியினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தேவையான சந்தர்ப்பங்களில் தெங்கு செய்கை சபைக்கு தெங்கு ஆராய்ச்சி சபை தொழிநுட்ப ஆலோசனைகளை வழங்குகன்றது என தயவுடன் அறியத்தருகிறேன். அவ்வாறே இளநீர் விதைகளை உற்பத்தி செய்வதற்காக தாய் மரங்கள் அடங்கிய ஒரு தொகுதியும் தெங்கு ஆராய்ச்சி சபையில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இளநீர் உற்பத்தியை அதிகரிப்பதற்கான தேவையான பங்களிப்பை தெங்கு ஆராய்ச்சி சபை வழங்குமென அறியத்தருகின்றேன்.	சட்டத்தின் பிரகாரம் இளநீர் செய்கையை விரிவுப்படுத்துவதற்கு மற்றும் ஏற்றுமதி தொடர்பான பரிந்துரைகளை வழங்குவதற்கு சபைக்கு அதிகாரம் காணப்படுவதனால் அதற்கேற்ப செயற்படல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 218,628,334 தொகையான பற்றாக்குறையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 8,779,882 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 227,408,216 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு இணையாக மீளாய்வாண்டின் மரபணு வளம் மற்றும் ஆராய்ச்சி

நிலையத்தின் வருமானம் மற்றும் பிற வருமானம் முறையே ரூபா 21,773,336 இனால் மற்றும் ரூபா 136,531,879 இனால் குறைந்தமை மற்றும் நுகர்வுப் பொருட்களின் பயன்பாடு மற்றும் மரபணு வளம் மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் செலவுகள் முறையே ரூபா 22,680,824 இனால் மற்றும் ரூபா 60,968,462 இனால் அதிகரித்தமையும் இந்த வீழ்ச்சிக்கு காரணங்களாக இருந்தன.

2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் பிரதான வருமான மற்றும் செலவின விடயங்கள் கடந்த வருடத்துடன் ஒப்பிடப்பட்டு பின்வருமாறு தரப்பட்டுள்ளது

விடயம்	2024 ஆண்டு ரூ.	2023 ஆண்டு ரூ.	விலகல் ரூ.	விலகல் சதவீதமாக
வருமானம் ------------				
திறைச்சேரி பெறுவனவு	329,435,080	326,946,000	2,489,080	1
மரபணு வள நிலையத்தின் வருமானம்	331,235,580	353,008,916	(21,773,336)	(6)
ஏனைய வருமானங்கள்	20,294,538	156,826,417	(136,531,879)	(87)
செலவினம் -------------				
சம்பளம், படிகள் மற்றும் ஊழியர் நலன்கள்	233,718,271	234,122,833	(404,562)	0
வழங்கல்	103,811,172	81,130,348	22,680,824	28
மரபணு வள நிலையத்தின் செலவினம்	399,523,171	338,554,709	60,968,462	18
ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினங்களின் பதிவழிப்பு	51,784,603	45,617,368	6,167,235	13.5
ஏனையவை	68,397,491	85,804,371	(17,406,880)	(20)

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) கினியம தெங்கு செய்கை செயற்திட்டம் செயற்படுத்தப்படுகின்ற 141 ஏக்கர் நிலப்பரப்பை உள்ளடக்கும் வகையில் ஒரு தனியார் நிறுவனத்திற்கு ரூபா 24,351,906 செலுத்தி நீர் குழாய் அமைப்பொன்று பொருத்தப்பட்டிருந்த போதிலும், முழு நிலப்பரப்பில் நடப்பட்ட அனைத்து தாவரங்களுக்கும் நீர் வழங்குவதற்கு அந்த நீர் அமைப்பால் முடியவில்லை.	தேவையான கொள்ளளவு இல்லாத காரணத்தினால் குழாய் நீர்பாசன அமைப்பின் ஒரு பகுதியில் 25 ஏக்கரிலான சுமார் 1600 தெங்கு மரங்களுக்கு குழாய் நீர்பாசன அமைப்பு ஊடாக நீர் வழங்கப்படுகின்றது. கினியம விதை தெங்கு தோட்டத்திலுள்ள 141 ஏக்கர் முழு நிலப்பரப்பிற்கும் நீர் வழங்குவதற்காக 2018 ஆம் ஆண்டில் நிதியேற்பாட்டின் ஊடாக நீர் குழாய் அமைப்பொன்று கட்டப்பட்டது. ஒரு நிமிடத்திற்கு 200 லீட்டர் கண்ணீர் பெற முடியும் என நீர் வழங்கல் சபையினால் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த அறிக்கையின்	கினியம விதை தெங்கு தோட்டத்தில் உள்ள நீர் குழாய் அமைப்பிலிருந்து வினைத்திறனான செயல்திறனை பெறுவதற்கு பொருத்தமான மாற்று நீர் வழங்கல் முறைகளை பின்பற்றப்படல் வேண்டும்.

	அடிப்படையில் கிணியம விதை தெங்கு தோட்டத்தில் உள்ள ஆழ்துளைக் கிணற்றில் (Deep Well) இருந்து தண்ணீர் எடுப்பதற்கு திட்டமிடப்பட்டு இந்த நீர் குழாய் அமைப்பு கட்டப்பட்டது. வறண்ட காலங்களில் ஒரு நிமிடத்திற்கு 200 லீட்டர் தண்ணீரை இறைக்க முடியாத காரணத்தினால், ஆழ்துளைக் கிணற்றில் இருந்து தண்ணீரை சேமித்து வைப்பதற்காக நீர் தேக்கத் தொட்டியொன்று (water sump) அமைக்கப்பட்டு நீர் குழாய் அமைப்பு நவீனமயமாக்கப்பட்டது.	
(ஆ) தெங்கு ஆராய்ச்சி சபையினால் 3 மரபணு வள மத்திய நிலையங்கள், 6 ஆராய்ச்சி மத்திய நிலையங்கள் மற்றும் ஒரு மாதிரிப் பண்ணையை நடத்தி வருகின்றதுடன் இந்த நிறுவனங்கள் அனைத்திலிருந்தும் 2024 ஆம் ஆண்டில் பெறப்பட்ட விளைச்சல் 2,962,751 தேங்காய்கள் ஆவதுடன் அது 2023 ஆம் ஆண்டிற்கு இணையாக 548,064 தேங்காய்கள் குறைவாகவும் அதாவது 15 சதவீதம் குறைவாக காணப்பட்டது.	• உரம் தொடர்பான கடந்தகால அரசாங்கத்தின் கொள்கையின் காரணமாக சந்தையில் இரசாயண உரங்களுக்கு காணப்பட்ட பற்றாக்குறை காரணமாக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் தெங்கு ஆராய்ச்சி சபை மற்றும் மரபணு வளம மையங்களுக்கான உரங்கள் கொள்வனவு செய்ய முடியவில்லை. இதன் தாக்கம் 2023 ஆம் ஆண்டு தொடக்கம் அடுத்த 02 ஆண்டுகளுக்கு தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது. • தெங்கு செய்கையில் நல்ல அறுவடை பெற்றுக் கொள்வதற்கு ஆண்டு முழுவதும் பரவலாக 1500 மி.மீ.க்கு அதிகமாக வருடாந்த மழைவீழ்ச்சி கிடைக்க வேண்டும். ஆராய்ச்சி மற்றும் மரபணு வள மையங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய வகையில் 2022 ஆம் ஆண்டில் பெறப்பட்ட வருடாந்த மழைவீழ்ச்சி பொருண்மையாக குறைவாகும். அவ்வாறே, ஆண்டு முழுதும் நன்கு பரவலான மழைவீழ்ச்சி பெறப்பட்டிருக்கவில்லை. இதன் காரணத்தினால் 2022 ஆம் ஆண்டினுள் ஈரமான நாட்களின் எண்ணிக்கை குறைந்ததால் 2022 ஆம் ஆண்டில் உண்டான தெங்கு பூக்களிலிருந்து 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் பெற்றுக் கொள்ளப்பட்ட தெங்கு அறுவடை கணிசமாக குறைவடைந்திருந்தது. • 2023 ஆம் ஆண்டின் சுற்றுசூழல் வெப்பநிலையும் உயர்ந்ததுடன் அக் காரணத்தினால் மகரந்த சேர்க்கை சரியாக நடைபெறாதமையினால் தெங்கு அறுவடை குறைந்தது.	தெங்கு செய்கைக்கு போதுமான உரத்தையும் தண்ணீரையும் வழங்குவதன் ஊடாக அறுவடையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) 2023 யூலை 06 ஆம் திகதி நடைபெற்ற அரச முயற்சிகள் செயற்குழுவின் போது தெங்கு ஆராய்ச்சி சபைக்காக பின்வரும் 03 பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2 ஆண்டுகளாகியும் அந்த பரிந்துரைகள் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		
i. தெங்கு செய்கையின் போதான வெள்ளை ஈக்களின் பாதிப்பை அவசரகால அனர்த்த நிலைமையாகக் கருதி, 3 நிறுவனங்களும் (தெங்கு ஆராய்ச்சி சபை, தென்னை பயிர்செய்கை சபை மற்றும் தென்னை அபிவிருத்தி அதகார சபை) இதற்கான தெங்கு செய்கை அனர்த்த முகாமைத்துவ பிரிவை நிறுவப்பட்டிருந்த போதிலும், திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அனர்த்ததிலிருந்து பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தெங்கு ஆராய்ச்சி சபை, தென்னை பயிர்செய்கை சபை மற்றும் தென்னை அபிவிருத்தி அதகார சபை ஆகியன இணைந்து வெள்ளை ஈக்கள் உட்பட அவசரகால அனர்த்த நிலைமைகளை முகாமைத்தும் செய்வதற்காக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையமொன்று நிறுவப்பட்டுள்ளது.	அவசர அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தை வினைத்திறன் மிக்க மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு அதன் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
ii. சபையின் வெற்றிடங்கள் நிரப்பப்படுதல்.	சபையின் வெற்றிடங்கள் நிரப்புதல் 2022.04.26 திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவு சுற்றறிக்கை ஊடாக அரசாங்க செலவுகள் கட்டுப்படுத்துவதற்காக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள ஆலோசனை பிரகாரம் அனைத்து ஆட்சேர்ப்புக்களும் இடைநிறுத்தப்பட்டதன் காரணத்தினால் வெற்றிடங்கள் நிரப்புவதற்கு தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்திற்கு முடியாது போனது.	அத்தியாவசியமான வெற்றிடங்கள் நிரப்பபடுதல் வேண்டும்.
iii. நிறுவனத்தின் ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் அதிக சம்பளமுடைய தொழில்களுக்கு விண்ணப்பித்து சபையை விட்டு வெளியேறுவதைத் தடுப்பதற்காக நிதி அமைச்சுடன் கலந்துரையாடி சம்பளம் தொடர்பான முரண்பாடுகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.	நிறுவனத்தின் அத்தியாவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு தொடர்ச்சியான கோரிக்கைகள் மற்றும் சேவைத் தேவைப்பாடுகளை கருத்திற் கொண்டு 67 வெற்றிடங்கள் நிரப்புவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2023 நவம்பர் தொடக்கம் 2024 ஏப்ரல் வரை 3 சந்தர்ப்பங்களின் போது 2024 ஆண்டிற்காக 26 புதிய ஆட்சேர்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் ஒரு வெற்றிடம் நிரப்புவதற்கு தொடர்புடைய விளம்பரங்கள் வெளியிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு	ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் நிறுவனத்தினுள் தக்க வைத்துக் கொள்வதற்கு தொடர்புடைய முறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டும்.

	நடைமுறைக்கு அமைவாக விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சை பரிந்துரை, சபையின் அங்கீகாரத்துடன் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி, உள்ளக ரீதியாக மட்டும் ஆட்சேர்க்கப்படுகின்ற பதவிகள், முகாமையாளர் (விதை தெங்குத் தோட்டம்) தபவிகள், முதன்மை நிலை பதவிகள் ஆகியவற்றுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக பிரதர் அலுவலகத்தின் கீழ் செயற்படுகின்ற அரச சேவையின் ஆட்சேர்ப்பு செயல்முறை பற்றிய குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	
(ஆ) 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரை ஆம்பிக்கப்பட்ட 6 ஆராய்ச்சி செயற்திட்டங்கள் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்ததுடன் அவை நிறுத்தப்படும் சந்தர்ப்பத்தின் போது ரூபா 12.76 மில்லியன் திரண்ட நிதியிலிருந்து மூலதன செலவாக செலவிடப்பட்டிருந்தது.	இந்த அனைத்து ஆராய்ச்சிகளும் கைவிடப்படவில்லை. 06 ஆராய்ச்சிகள் மட்டும் பிண்ணினைப்பில் காண்பிக்கப்பட்டுள்ள காரணங்களை அடிப்படையாகக் கொண்டு கைவிடப்பட்டுள்ளன. எஞ்சிய அளைத்து ஆராய்ச்சிகளும் நிறைவு செய்யப்பட்ட அல்லது தொடர்ந்து மேற்கொள்ளும் ஆராய்ச்சிகளாக பிண்ணினைப்பு 02 ஊடாக தகவல் காண்பிக்கப்பட்டுள்ளது.	கைவிடப்பட்ட செயற்திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கும் திறன் குறித்து தேடியறியப்பட்டு மீண்டும் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.
(இ) பண்டிரிப்புவ மரபணு வள மையத்தின் வளாகத்தில் உள்ள தெங்கு செய்கையின் கீழ் துணை பயிர்களாக டிராகன் பழம் செய்கை 2015 ஆம் ஆண்டில் தெங்கு ஆராய்ச்சி சபையின் தாவர அறிவியல் பிரிவினால் ஆரம்பிக்கப்பட்டு அதற்காக ரூபா 1,086,296 செலவிடப்பட்டு 350 தாங்கு கம்பங்களில் 700 டிராகன் பழ கன்றுகள் நடப்பட்டிருந்த போதிலும் 2025 பெப்ரவரி 25 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அந்த இடத்தில் தாங்குக் கம்பங்கள் மட்டும் இருந்தமை அவதானிக்கப்பட்டது. புதிய செய்கையை ஆரம்பிப்பதற்கு அல்லது அந்த இடத்தினை வேறு பயனுள்ள நடவடிக்கைக்கு பயன்படுத்துவதற்கு சபை இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2015 ஆம் ஆண்டில் தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் தாவர அறிவியல் பிரிவின் ஊடாக நிறுவப்பட்ட டிராகன் பழ செய்கைக்குரிய ஆராய்ச்சி செயல்முறை 2019.11.27 ஆம் திகதி தொடக்கம் பண்டிரிப்புவ ஆராய்ச்சி மையத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த தாங்கு கம்பங்கள் தற்போது அகற்றப்பட்டு தாவர அறிவியல் பிரிவின் ஆலோசனை பிரகாரம் ரத்மலாகார ஆராய்ச்சி மையத்தின் வேறு துணை பயிரை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.	பயனுள்ள வேறு பணியொன்றிற்காக செய்கை தாங்கு கம்பங்கள் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஈ) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் நிறுத்தி வைக்கப்பட்ட வைப்பு	நிறுவனத்தின் வெவ்வேறு பணிகளின் போது நிறுத்தி வைக்கப்பட்ட தொகையில் நிகழ்காலத்தில்	நிறுத்தி வைக்கப்பட்ட வைப்புத் தொகை இரண்டு ஆண்டுகளுள்

பெறுமதியான ரூபா 6,660,703 இல் ரூபா 4,262,103 ஆன தொகை 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	நிறுவனத்தின் ஒப்பந்த நடவடிக்கைகளுக்கு தொடர்பற்ற ஒப்பந்தக்காரர்களின் நீண்ட காலமாக நிலவி வரும் சில மீதிகள் அங்கீகாரத்துடன் 2024 ஆம் ஆண்டில் வருமானத்திற்கு எடுக்கப்பட்டுள்ளதுடன் இங்கு காணப்படுகின்ற மீதிகளுக்கு தொடர்புடைய சில ஒப்பந்தக்காரர்கள் நிறுவனத்துடன் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றமை இது விடுவிப்பதற்கு காரணமாகியுள்ளது.	தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(உ) 2022 ஆம் ஆண்டில் பண்டிரிப்புவ மரபணு வள மையத்தில் துணைப் பயிர்களாக நடப்பட்ட 44 ஆணைக்கொய்யா பயிர்களும், 101 கொய்யா கன்றுகளும், 62 முந்திரி கன்றுகளும் 56 ரம்புட்டான் கன்றுகளும் அடையாளம் காணப்படாத காரணங்களால் அழிந்திருந்ததுடன் பல்லம மரபணு வள மையத்தில் 1,950 கறுவா கன்றுகளும் பொத்துகளம மரபணு வள மையத்தில் 54 முந்திரி கன்றுகளும் மாதுருஓயா மரபணு வள மையத்தில் 334 பாக்கு கன்றுகளும் அம்பகலே மரபணு வள மையத்தில் 385 எலுமிச்சை கன்றுகளும் வெவ்வேறு காரணங்களால் அழிந்திருந்தன. அதற்கான மொத்த செலவு ரூபா 151,512 ஆன தொகை தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தினால் ஏற்கப்பட்டிருந்தது.	இந்த கருத்துடன் உடன்படுகின்றோம். சரியான விவசாய நடைமுறைகளைப் பின்பற்றாமை, காட்டு விலங்குகளால் ஏற்பட்ட சேதங்கள் மற்றும் கடுமையான வறட்சி காரணமாக துணைப் பயிர் கன்றுகள் அழிந்துவிட்டன.	கன்றுகள் அழிந்ததற்கான காரணங்களை கண்டறிந்து, எதிர்காலத்தில் அத்தகைய நிலைமை ஏற்படாதிருக்க தீர்வு காண வேண்டும்.
(ஊ) தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் மரபியல் மற்றும் வளர்ப்புப் பிரிவினால் துணுக்காய், ஆழுங்குளம் 65 இராணுவ முகாமில் உள்ள 5 ஏக்கர் நிலப்பரப்பில் 2020 மார்ச் மாதத்தில் CRIC 60 தெங்கு வகையைச் சேர்ந்த 317 கன்றுகள் நடப்பட்டிருந்ததுடன் கன்றுகளில் 3 இல் 2 பங்கு மட்டும் அழிந்திருந்தமையினால் 2021 திசெம்பர் மாதத்தில் மீண்டும் ஒரு முறை 216 கன்றுகள் நடப்பட்டன. நடப்பட்ட கன்றுகளை பராமரிக்கும் பொறுப்பு இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தாலும் அப் பொறுப்பு எழுத்துபூர்வமான ஒப்பந்தம் அல்லது புரிந்துணர்வு ஒப்பந்தம் ஊடாக கையளிக்கப்பட்டிருக்கவில்லை. 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட தோல்வியின்	இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் உடன்படுகின்றதுடன் எதிர் காலத்தில் இது போன்ற குறைபாடுகள் ஏற்படாதிருக்க ஆராய்ச்சி செய்கைகள் நிறுவப்படும் போது எப்போதும் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று ஊடாக தொடர்புபட்ட பிற தரப்பினருக்கு எழுத்துபூர்வமாக பொறுப்புக்களை வழங்குவோம் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.	ஆராய்ச்சி செய்கை கள் வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு நிறுவனத்திற்கு வெளியே அவை மேற்கொள்ளப்பட்டால் அந்த பொறுப்பு எழுத்துபூர்வமாக தொடர்புடைய தரப்பினருடன் ஒப்படைக்க வேண்டும்.

காரணமாக இந்த செய்கை கைவிடப்பட்டிருந்தது. நடப்பட்ட கன்றுகளை பராமரிக்கும் பொறுப்பு எழுத்துபூர்வமாக இராணுவத்திடம் ஒப்படைக்கப்படாததால் இது ஒரு விளைவற்ற செலவு என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.		
(எ) 2022 செப்தெம்பர் மாதத்தில் தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தினால் கந்தகாடு இராணுவ பண்ணையில் 100 ஏக்கரில் தெங்கு செய்கையொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2023 ஆகஸ்ட் மாதம் தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தினால் கள பரீசோதனையின் போது நடப்பட்டிருந்த 1,443 கன்றுகளில் 1,200 கன்றுகள், அதாவது 83 சதவீதம் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. இராணுவம் மற்றும் தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் இடையே இருந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் III ஆம் பிரிவின் iii மற்றும் iv ஆம் துணைப் பிரிவுகளுக்கு புறம்பாக விதை தெங்குத் தோட்டம் பராமரிக்கப்பட்டு வந்தது. விதை தெங்கு தோட்டத்திற்காக கன்றுகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 525,000 தொகை ஏற்கப்பட்டிருந்ததுடன் மேலதிகமாக ஏற்கப்பட்ட போக்குவரத்து, பதவியணி மற்றும் ஏனைய செலவுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன் அவ்வாறு ஏற்கப்பட்ட அனைத்து செலவுகளும் விளைவற்ற செலவுகளாக அவதானிக்கப்பட்டது.	குறுகிய காலத்திற்குள் இந்த விதை தெங்கு தோட்டத்தை நிறுவி வறண்ட வலயத்திற்கு தேவையான விதை தேங்காய்களை வழங்குவதே எங்கள் நோக்கமாக இருந்தது. எனினும் எதிர்பாராத விதமாக இடம்யெரும் யானைகளின் எண்ணிக்கை அதிகரித்ததன் காரணமாக இந்த பணியை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வலு கடினம் என இலங்கை இராணுவத்தினால் தெரிவித்து அனுப்பப்பட்டமையினால் இந்த விதை தெங்கு தோட்டம் இடைநடுவே கைவிட வேண்டியிருந்தது என்பதை மேலும் அறியத்தருகிறேன்.	இராணுவம் மற்றும் தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் உடன்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஏ) ஆராய்ச்சி நிறுவனத்திற்கு சொந்தமான மரபணு வள மையங்களில் உள்ள தெங்கு மரங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் காய்காத மரங்களின் எண்ணிக்கை 1.9 சதவீதம் தொடக்கம் 47.7 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. காய்காத மரங்கள் உரிய அங்கீகாரத்துடன் அகற்றுவதற்கும் அதற்கு பதிலாக மீண்டும் கன்றுகளை நடுவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 10 மரபணு வள மையங்களிலும் உள்ள மொத்த தெங்கு மரங்களின் எண்ணிக்கை 97,566 ஆக இருந்த நிலையில்	தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்திற்கு சொந்தமான தோட்டங்களில் காய்க்காத மரங்களின் எண்ணிக்கை 20,166 ஆக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதில் 13,288 ஆனவை கன்றுகள் நிலையில் உள்ளன. அதகாவது அந்த செய்கைகள் எதிர் காலத்தில் அறுவடையை தரும். எஞ்சிய காய்க்காத மரங்கள் படிப்படியாக அகற்றப்பட்டு புதிய செய்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அந்த தொகை மொத்த செய்கையில் 7% மட்டுமாகும்.	காய்க்காத மரங்கள் அகற்றப்பட்டு புதிய மரங்கள் நடப்படுவதற்கு திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செய்றபடுத்தப்படல் வேண்டும்.

காய்காத மரங்களின் எண்ணிக்கை 6,878 ஆக இருந்தது. ஒட்டு மொத்தமாக பார்க்கும் போது 7 சதவீத மரங்கள் காய்காதவை என அவதானிக்கப்பட்டது.		
(ஐ) ரூபா 2,240,342 இற்கான 06 கொள்வனவு முற்பணங்கள் 13 மாதங்கள் மற்றும் 21 மாதங்கள் இடையான காலம் கடந்திருந்த போதிலும் தீர்க்கப்படுவதறற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இங்கு தீர்ரக்கப்படாதிருந்த ரூபா 2,240,342 தொகையினுள் சில முற்பணங்கள் தெற்போது தீர்க்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய முற்பணங்கள் 2025 ஆம் ஆண்டினுள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	முற்பணம் குறித்த ஆய்வினுள் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஒ) கடந்த பத்து ஆண்டுகளில் (2014-2024) சபையின் கீழ் உள்ள 11 தோட்டங்களில் தெங்கு விளைச்சல் பரிசோதிக்கப்பட்ட போது 2014 இல் தெங்கு விளைச்சல் 5,693,680 தேங்காய்களாகவும் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் அவ் விளைச்சல் முறையே 3,546,815 தேங்காய்களாகவும் 2,962,751 தேங்காய்களாகவும் காணப்பட்டன. 2014 ஆம் ஆண்டிற்கு இணையாக தெங்கு விளைச்சல் 38 சதவீதத்தினால் மற்றும் 48 சதவீதத்தினால் குறைவடைந்நமையினால் சபையின் தெங்கு விளைச்சல் கணிசமாக குறைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது.	உரம் தொடர்பான கடந்தகால அரசாங்கத்தின் கொள்கையின் காரணமாக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் உரம் இடப்படாததுடன் 2024 ஆம் ஆண்டில் உரம் இடப்பட்டிருந்தது. அந்த அறுவடையை பெற இன்னும் 02 ஆண்டுகள் கடக்கப்படும். தோட்ட முகாமைத்துவ குழு உறுப்பினர்களும் கலந்துக் கொள்கின்றமையினால் தொழிநுட்ப குழுவின் அவதானிப்புக்கள் முகாமைத்துவத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தெங்கு அறுவடையை அதிகரிப்பதற்கு செயற்படுத்தப்படுகின்ற முறைகள் தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்பட்ட முறைகளாகும். தெங்கு அறுவடை குறைவடைந்தமைக்கு காரணம் 2022, 2023 ஆம் ஆண்டுகளில் தெங்கிற்கு உரம் இடப்படாததும் வெள்ளை ஈக்களின் பாதிப்பினால் தெங்கு மரங்களின் தரம் குறைவடைந்ததும் ஆகும்.	தெங்கு அறுவடையை அதிகரிப்பதற்கு விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப குழுக்களின் உதவியைப் பெற்று குறைப்பாடுகளுக்கான தீர்வுகள் காணப்படல் வேண்டும்.
(ஓ) தெங்கு ஆராய்ச்சி சபையில் சேவையாற்றிய போது கல்வி விடுமுறை பெற்றுக் கொள்ளப்பட்டு சபையுடன் ஏற்படுத்திக் கொண்ட சேவை ஒப்பந்தத்தை மீறி மீண்டும் கடமைக்குத் திரும்பாத நான்னு உத்தியோகத்தர்கள் மற்றும் மீண்டும் கடமைக்குத் திரும்பி கட்டாய சேவைக் காலத்தை பூர்த்தி செய்யாத ஐந்து உத்தியோகத்தர்களிடமிருந்து 2024 திசெம்பர் 12 இல் உள்ளவாறு சபைக்கு ரூபா 46,856,458 அறவிடப்பட வேண்டியிருந்தது. ஏழு உத்தியோகத்தர்களும் தொடர்பான வழக்குகள் மாரவில மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்று வரும்	சேவை ஒப்பந்தம் மீறப்பட்ட 7 உத்தியோகத்தர்களுக்கு எதிராக தற்போது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் இன்னும் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.	ஒப்பந்தத்தின் பிரகாரம் பணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

நிலையில் 2024 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் சேவையிலிருந்து விலகிச் சென்ற இரு உத்தியோகத்தர்களுக்கும் எதிராக இதுவரை வழக்கு தொடருவதற்கு சபை நடவடிக்கை எடுக்கவில்லை என வெளிப்படுத்தப்பட்டது.		

3.3 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
நிறுவனத்தின் நிரேஷ்ட நிலையில் 69 பதவிகளில் 36 பதவிகள் அதாவது 52 சதவீதம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் வெற்றிடங்களாக காணப்பட்டது. மேலும் மூன்றாம் நிலையில் 43 பதவிகளில் 8 உம், இரண்டாம் நிலையில் 149 பதவிகளில் 48 உம், முதன்மை நிலையில் 130 பதவிகளில் 58 உம் வெற்றிடங்களாக காணப்பட்டன.	2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2022.04.26 திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை ஊடாக அரச செலவுகளை கட்டுப்படுத்துவதற்காக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள ஆலோசனை பிரகாரம் அனைத்து ஆட்சேர்ப்புக்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. நிறுவனத்தின் அத்தியாவசிய வெற்றிடங்கள் நிரப்புவதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுக்குமாறு எங்களினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை கருத்திற் கொள்ளப்பட்டு 67 வெற்றிடங்கள் நிரப்புவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2023 நவம்பர் மாதம் தொடக்கம் 2024 ஏப்ரல் மாதம் வரை 3 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக் கொடுக்கப்பட்ட அங்கீகாரங்களின் அடிப்படையில் 2024 பெப்ரவரி தொடக்கம் இது வரையான காலப்பகுதியில் 26 வெற்றிடங்களுக்காக புதிய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. அத்தியாவசிய அனைத்து வெற்றிடங்களும் நிரப்புவதற்கு பிரதமர் அலுவலகத்தில் செயற்படுத்தப்படுகின்ற அரச சேவையின் ஆட்சேர்ப்பு செயல்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் பதவியணியினை முகாமைத்துவம் செய்வதற்கான அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் குழுவின் அங்கீகாரத்திற்காக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சிற்கு 2025.02.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	உரிய அங்கீகாரத்துடன் அத்தியாவசிய வெற்றிடங்களுக்கு ஆட்சேர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.